<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 23/2023**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய பக்கிரிசாமி **PW1** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 17.04.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பக்கிரிசாமி | | |
| Father /Husband Name | : | முனியாண்டி | Court | : |
| Village | : | காரைக்கால் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 74/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

வாதி பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழின் கணினி நகல் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.